இயேசுவின் சமாதானம்
உடைந்த உள்ளங்களுக்கு

வருடம் 12 ஏப்ரல் - 2014 மாதம் 10

# இயேசுவை தேடுங்கள்



ஏ.எஸ்.வி. ராபின்

# ANTANTULLA APPAM TRUST

( A Non - Profitable Religious & Charitable Trust)

50, Railway Station Road, Kodambakkam, Chennai 600 024, Tamilnadu, INDIA
Ph : 044-2483599, 24840407, 24803932, 65391925 Fax : 044-24803933,
Email : appam@appamonline.com jsamjeb@appamonline.com appam@vsnl.com



**J. Sam Jebadurai,** M.A.,
Evangelist & Managing Trustee

**Date : 27.02.2014**

கிறிஸ்துவுக்குள் அன்பான தம்பிக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும் சமாதானமும் உன்னில் பெருகுவதாக.

ஜனவரி 4,5, தேதிகளில் இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா வெற்றிகரமாக நடந்து முடிந்ததை அறிந்து சந்தோஷப்பட்டேன். நீ என் மேல் வைத்திருக்கிற அன்பிற்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறேன்.

தொடர்ந்து உனக்காகவும், உன்னுடைய குடும்பத்திற்காகவும், இயேசுவின் சமாதானம் ஊழியங்களுக்காகவும், ஜெபித்துக் கொள்கிறேன். நீயும் எனக்காகவும், என்னுடைய ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்!

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார் (சங். 128 : 5)

அன்பும் ஜெபமும்

கிறிஸ்துவின் மகிமையான பணியில்
**சகோ. ஜே. சாம் ஜெபத்துரை**

# உடைந்த உள்ளங்களுக்கு இயேசுவின் சமாதானம்

## பரவசப் பெருவிழா-2014

## வெளியீடுகள்









**செய்திகள், சாட்சிகள் (DVD), என்இயேசு (ACD)பாரவசப் பாடல்கள் வேண்டுவோர் ஒவ்வொன்றுக்கும் ரூ. 120 (தபால் செலவு உட்பட) காணிக்கை அனுப்பி தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**

# அன்புக் கடிதம்

தேவன் இயேசு நம்மோடு
இருக்கும்போது
நமக்கு விரோதமாய்
இருப்பவர்கள் யார்?
(ரோமர் 8:31).



**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

கர்த்தர் இயேசுவின் கிருபையினால் நீங்களும், உங்கள் குடும்பத்தினர் அனைவரும் நலமாய் இருப்பீர்கள் என நம்புகிறேன். இவ்வாண்டின் 4வது மாதத்திற்குள் வந்திருக்கும் நம்மை தேவன் இயேசு ஆசீர்வதிப்பது உறுதி.

வரப்போகிற பாராளுமன்றத்தேர்தலில் தேவன் இயேசு விரும்புகிற பிரதமர் மக்களால் தேர்வு செய்யப்படும்படி நாம் ஊக்கமாய் ஜெபிப்போம். இதற்காக உபாவாசித்து ஜெபிப்போம்.

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் தேவைகள் நாளுக்கு நாள் பெருகி வருவதால், உங்கள் ஊக்கமான ஜெபத்தை அதிகமாய் எதிர்பார்க்கிறோம். தொடர்ந்து நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்து வருகிறோம்.

நீங்களும் தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, இயேசுவின் சமாதானம் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

மார்ச் 22-ம் தேதி, ராஜ்லின்ட் ராபின் 24வது பிறந்தநாளைக் காண
தேவன் இயேசு கிருபை செய்தார். தொடர்ந்து மகனுக்காக,
மகன் செய்யும் தொழிலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.



**With Deep Love & Affection With Prayers**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

- ஏ.எஸ்.வி. ராபின்.



இயேசுவின் சமாதானம்
உடைந்த உள்ளங்களுக்கு
மாத இதழ்

**Final Designing & Editing**

RAJLYNT ROBIN B.Sc.,Vis.com., (M.B.A.)

Managing Partner, Rajlynt Exports & Imports



- ஏ.எஸ்.வி. ராபின்

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும் (மத். 6:33).**

இந்த உலகத்தில் ஒரு மனிதன் வாழத் தேவையான எல்லாவற்றையும் தேவன் இயேசு தருவார். இவைகளை பெற்றுக் கொள்ள, முதலாவது நம்மை உருவாக்கிய இயேசுவை தேட வேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்


தேவனுடைய ராஜ்யம் என்பது, இந்த உலக வாழ்க்கையை விட வித்தியாசமானது உயர்வானது, உன்னதமானது, நிரந்தரமானது. தேவன் இயேசு நமக்குள் தங்கி நம்மை அரசாளுவதே தேவனுடைய ராஜ்யம். நாம் தேவனுடைய ஆலயம் என்றும், தேவனுடைய ஆவி நமக்குள் தங்கியிருக்கிறார் என்றும் 1 கொரி. 3:16ல் பார்க்கிறோம். தேவன் நமக்குள் தங்கி நம்மை நடத்த வேண்டுமென்றால், அவருடைய நீதியை நாம் கடைபிடிக்க வேண்டும். பரிசுத்தமாய் வாழ வேண்டும். ஏனென்றால் நம்மை உருவாக்கிய தேவன் இயேசு மகா பரிசுத்தர். அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவான் 4:8). அன்புள்ள இருதயத்தில்தான் தேவன் இயேசு தங்குவார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் (1யோவான் 4:16). அவர் உருக்கமும், இரக்கமும் நிறைந்தவர். (சங்கீதம் 103:8). ஆகவே நாமும் உருக்கமும், இரக்கமும் நிறைந்தவர்களாக வாழவேண்டும். இயேசு நம்மை நேசிப்பது போல, நாம் பிறமக்களை ஜாதி, மதம் பார்க்காமல் நேசிக்க வேண்டும். இதுவே தேவனுடைய ராஜ்யம் நமக்குள் இருப்பதற்கு அடையாளம்.

## உலகத்தை விட்டுவிடுவோம்.



உப்பு நிறைந்த தண்ணீரில் மீன் வாழ்கிறது. ஆனால் மீனுக்குள் உப்பு ஏறாது. அது போல பாவம் அக்கிரமம், அநியாயம் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்ந்தாலும். இயேசுவுக்கு பிடிக்காத உலக காரியங்கள் நம்மில் இருக்கக் கூடாது. இதற்கு நாம் எப்போதும் ஜெபத்திலும், தேவனை துதித்து மகிமைப்படுத்துவதிலும் வாழ்ந்து, கர்த்தர் இயேசுவை சந்தோப்படுத்த வேண்டும். உலக காரியங்கள் நம்மை தொடாமல் இருக்க நாம் பாவத்திலிருந்து மனம் திரும்பி பாவமன்னிகென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது பரிசுத்த வாழ்வை நாம் பெற்றுக் கொள்வோம். (அப் 2:38). ஆகவே ஒவ்வொருவருக்கும் ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியின் அபிகேமும் மிக மிக முக்கியம்.

# இயேசுவை தேடுங்கள்




## இயேசு விரும்பும் சாட்சி

நாம் இயேசுவைத் தேடி அவருக்கு பிரியமாய் வாழ்ந்து பரிசுத்த ஆவியின் அபிகேத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் உலக மக்களுக்கு முன்னால் நல்ல பெயரோடு வாழ வேண்டும் என்பது தான் கர்த்தர் இயேசுவின் விருப்பம். (அப். 1:8). தாகத்தோடு இயேசுவைத் தேடி பரிசுத்த ஆவியின் அபிகேத்தைப் பெற்றவர்கள் ஆரம்பத்தில் சாட்சியாய் வாழுகிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல இயேசு தங்களுக்குள் வாழ்கிறார் என்ற பெருமையில், ஜெபம், துதியை விட்டுவிடுகிறார்கள். உடனே சத்துருவாகிய சாத்தான் உள்ளே புகுந்து விடுகிறான். பின் பாவத்தில் விழுந்து, சாட்சியான வாழ்வை இழந்து விடுகின்றனர். ஆகவே உலகில் உயர்ந்த உன்னதமான, விலையேறப்பெற்ற பரிசுத்த ஆவியின் அபிகேத்தை விட்டு விடாமல், நம் மரணம் வரை அதை பாதுகாத்துக் வாழ்வோம்.

## என்னை தேடி வந்த இயேசு

நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்து கொண்டேன் (யோவான் 15:16) இந்த வசனத்தின்படி எங்களை தேடி வந்து, அபிஷேகித்து, அவருடைய ஊழியத்தை தந்த தேவன் இயேசு மிகப்பெரியவர். ஒரு காலத்தில், ஆசீர்வாதம், சமாதானம் இல்லாமல் வாழ்ந்த எங்களை இன்று அநேக மக்களுக்கு, ஆசீர்வாதமான கருவிகளாக எங்களை பயன்படுத்தும் இயேசு நல்லவர். நீங்களும், தேவன் இயேசுவைத் தேடி வாருங்கள். உங்களையும் அவர் அபிஷேகித்து, எங்களை விட 1000 மடங்கு ஆசீர்வதிப்பார். மற்றவர்களையும் உங்களைக் கொண்டு இயேசு ஆசீர்வதிப்பது அதிக நிச்சயம்.

YouTube

இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

ராஜ்லின்ட் ராபின் பாடிய பாடல்கள் என் இயேசு



ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்
கொடுத்த தேவ செய்திகள், ராமராஜன், ஆனந்த்பாபு கொடுத்த சாட்சிகளைப் பார்த்து, தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

keyword : Rajlynt Robin

கற்றுக்கொள்வோம்

ஒருவருடைய கனிகளாலே அவர்களை அறிலாம்.
(மத்தேயு 7:20)

# நல்லவர்கள்

- ராஜ்லின்ட் ராபின்




அதிக வேலை வாங்குவது

ஏழைக்கு உதாவாதது




மற்றவர்களை கிண்டல் செய்வது

ஓட்டு கேட்பது



பின் நல்லவரைப் போல ஆலயத்திற்கு செல்வது, ஜெபிப்பது




ஒருவர் செய்யும் நல்ல செயல் அவரை நல்லவர், என்பதை உறுதிப்படுத்தும். ஒருவர் நல்லவராக வாழாமல், தேவனைத்தேடி, ஆலயத்திற்கு சென்றாலும், ஜெபித்தாலும் அவர்களை மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இயேசுவுக்கு பிரியமாய் வாழ்ந்து, நற்செயல்களை செய்து பின், ஆலயத்திற்கு செல்வதையும், ஜெபிப்பதையும்தான் இயேசு விரும்புகிறார்.

பெண்கள் பகுதி



- பொற்செல்வி ராபின்

# மனைவியா? தலைவியா?



**பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!**

என் பாசத்திற்குரிய சகோதரியே,
இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக !

## குடும்பத் தலைவர்

எந்த புருஷனும் தன் வீட்டுக்கு தானே அதிகாரியாய் இருக்க வேண்டும் என்று எஸ்தர் 1:22ம் வசனத்தில் வாசிக்கிறோம். இது 127 நாடுகளை தேவ கிருபையினால் அரசாண்ட அகாஸ்வேரு ராஜா, தன் மக்களுக்கு இட்ட கட்டளையாகும். கணவர் உயிரோடிருக்கும் வரை கணவரே குடும்பத்தலைவர் என்று பைபிளும் தெளிவாய் கூறுகிறது ( 1 தீமோத்தேயு 2:11 ). தேவன் ஆதாமை முதலாவது உருவாக்கினார். பின்பு ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினார். குடிக்கும், வழி தவறி செல்லும் கணவரையும், மனைவி அன்போடு, மதித்து நடத்த வேண்டும். அவருக்காக உபவாசித்து ஜெபிக்க வேண்டும். தவறான வழியில் செல்லும், பணத்தை வீணாய் செலவு செய்யும் கணவரிடம் குடும்பம் பாதிக்கப்படுவதை கண்ணீரோடு சொல்லுங்கள். தேவன் இயேசு அவர் உள்ளத்தை, வாழ்க்கையை மாற்றுவார்.

## கீழ்படிதல்

இப்படியே, பூர்வத்தில் (ஆதிகாலத்தில்) தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருந்த பரிசுத்த ஸ்திரீகளும், தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள் (1பேதுரு 3:5) என்று வாசிக்கிறோம். இன்றைய நிலை என்ன? சில பெண்கள் கணவரை பேசவிடுவதே இல்லை. எல்லாவற்றிலும் தலையிட்டு தங்களை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர் மத்தியில் கணவனுக்கு முந்தி மனைவி பேசுவது அநாகரீகம். மகனுடைய திருமணத்திற்கு பெண் தேட ஆரம்பித்தவுடன், இவர்கள் குடும்பத்திற்கு தலைவியாக மாறி நிறைய கண்டிஷன் போடுகிறார்கள். இத்தனை பவுன் நகை, இவ்வளவு ரொக்கப் பணம் கொடுங்கள் என்று பெண் வீட்டாரை மிரட்டுகிறார்கள். குடும்பத்தலைவராகிய கணவரை பேசவிடுவதில்லை நியாயமாய் நடந்து கொள்ளவிடுவதில்லை. இரக்கம் இல்லாத இந்த செயலை விட்டுவிடுங்கள்.



## மகள் அல்லவா?

இத்தனை பயங்கரமாய் பெண்கள் மாறுவதினால் நிறைய வாலிப பெண்கள் திருமணமாகாமல்

கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பெண் பிள்ளைகளைப் பார்த்து பெற்றோரும், உடன் பிறந்தவரும், குடும்பத்தினரும் கண்ணீர் வடிக்கிறார்கள். நீங்கள் உங்கள் மகனுக்கு தேடும் பெண் உங்களுக்கு மருமகள், அதாவது இன்னொரு மகள் அல்லவா? அன்பே பெரியது என்று 1 கொரிந்தியர் 13:13ம் வசனம் கூறுகிறது அல்லவா? உங்கள் உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தால் தங்கமும், பணமும் பெரிதாய் தோன்றுமோ? பெண்ணின் பெற்றோர், சகோதரர் தங்களால் இயன்றதைத்தானே தர முடியும்? அவர்களை கடனாளிகள் ஆக்கி சந்தோப்படுவீர்களோ? தேவன் வெறுக்கும் இந்த பாவத்தை செய்யாதிருங்கள்.

## அன்பு, மனதுருக்கம்

இயேசு உங்கள் மேல் வைத்த அன்பின் காரணமாக சிலுவையில் தன் உயிரை கொடுத்தாரே? ஏன் உங்கள் உள்ளம் கடினப்பட்டது? அன்பற்றுப்போனது? உங்கள் குடும்பத்திற்கேற்ற குணசாலி பெண்ணை தேடுங்கள். நகை, பணம் என்று தேடிப் போகாதிருங்கள். அன்பு இல்லாமல் ஒருவரும் பரலோகம் போக முடியாது. அன்பில்லாதவன் தேவனை அறியான் (1யோவான் 4:16). என்று வாசிக்கிறோமே! வாழ வந்த மருமகளிடமும் அன்பாய் இருங்கள். மகனும், மருமகளும் சந்தோஷமாய் வாழ அனுமதியுங்கள். சண்டை போட்டு, குடும்பத்தை பிரிக்காதிருங்கள். மருமகளின் குறைகளை, தேவன் இயேசு உங்களுக்கு மன்னிக்கிறது போல அவர்களுக்கு மன்னியுங்கள். அவர்களை நேசியுங்கள்.

நீங்கள் நல்ல மனைவியாக, மாமியாராக இருங்கள். உங்கள் கணவரே குடும்பத்தலைவர். குடும்பத்தில் தலைவி பதவியை தேவன் பெண்ணுக்கு கொடுக்கவில்லை (ரோமர் 7:2). கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரியே (பெண்ணே) புகழ்ப்படுவாள் (நீதிமொழிகள் 31:30) என்று வாசிக்கிறோமே!.

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

## உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST | A/c No. 615201134411 |
| | A.S.V. ROBIN | A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB Tamilnad Mercantile Bank Ltd | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM | A/c No. 725420502 |
| | A.S.V. ROBIN | A/c. No. 434465781 |


# கேள்வி பதில்




நான் ஒரு நிறுவனத்தில் வேலைப் பார்த்தேன். தற்போது நான் ஜெபித்து, சிறுதொழிலை செய்து வருகிறேன். கர்த்தர் இயேசு நாளுக்கு நாள் என்னையும், தொழிலையும் ஆசீர்வதித்து, உயர்த்தி வருகிறார். ஆனால், இதைப் பொறுக்க முடியாமல் நான் முதலில் வேலைப்பார்த்த நிறுவன அதிபர் (கிறிஸ்தவர்) என்மேல் பொறாமை கொண்டு, என்னைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், கேவலமாக பேசி வருகிறார். இது என் உள்ளத்தை உடைக்கிறது. நான் அவரை மன்னிக்கிறேன். ஆனாலும் சில வேளைகளில் இது எனக்கு சோர்வைக் கொண்டுவருகிறது. நான் எப்படி சந்தோஷம், சமாதானத்துடன் வாழ்வது?

**- ஆர். குணசேகர், சென்னை**

போட்டி பொறாமை நிறைந்த உலகத்தில், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். போட்டி, பொறாமை என்பது எல்லாத்துறைகளிலும் இருக்கிறது. இதற்கு கிறிஸ்தவர்களும் விதிவிலக்கு அல்ல. உலகத்தையும், மனிதர்களையும் உருவாக்கிய தேவன் இயேசு, மனிதராய் உலகத்தில் பிறந்தார். அவரிடம் நன்மை பெற்றவர்கள் அவருக்கு விரோதமாய் எழும்பினார்கள். இயேசு பட்ட பாடுகளை விட நம் பாடுகள் பெரிதல்ல. நாம் சந்தோமாய் , சமாதானமாய் வாழ இயேசு நமக்கு கற்றுக் கொடுத்த மத்தேயு 5 : 44ம் வசனத்தை கடைப்பிடித்து வாழ்வோம். நம் எதிரிகளை நேசிப்போம். நம்மை சபிக்கிறவர்களை ஆசீர்வதிப்போம். நம்மை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்வோம். நம்மை துன்பப்படுத்துகிற, அவமானப்படுத்துகிற மக்களுக்காக ஜெபம் செய்வோம். இதை தான் நம்மிடம் கர்த்தர் இயேசு எதிர்பார்க்கிறார். இது தான் ஒரு கிறிஸ்தவர் ஆவிக்குரிய வாழ்வில் உயர்ந்து இருப்பதற்கு அடையாளம். நம்மை குறித்து, மற்றவர்கள் பொறாமைப்படும் பொழுது, தேவன் நம்மை இன்னும் அதிகமாய் உயர்த்தி ஆசீர்வதிப்பது அதிக நிச்சயம். ஆகவே உங்கள் பாரத்தை கர்த்தர் இயேசுவிடம் வைத்துவிடுங்கள். (சங்கீதம் 55:22) கர்த்தர் இயேசு உங்களை நேசிக்கிறார் என்று மகிழ்ச்சியோடு, சமாதானத்தோடும் வாழுங்கள்.




# வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்) யோவான் 17-20

**" யார் பின்னிட்டு தரையிலே விழுந்தார்கள் "**

வசனம் குறிப்பிடுக



ஆக்னஸ் லாரன்ஸ்

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.04.2014**




ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு
தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்
keyword : ASV Robin, Rajlynt Robin, Porchelvi Robin





வாலிபர் பகுதி

# கேள், தருவார்

அன்புதம்பி, தங்கையே,
பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!

– பொற்செல்வி ராபின்

## இயேசு தருவார்

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் (மத்தேயு 7:7) என்று இறைவன் இயேசு கூறுகிறார். உனக்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்திருந்தாலும், அதை நீ அவரிடம் ஜெபத்தில் கேட்க வேண்டும் என்பதே இயேசுவின் இதய விருப்பம். உன் மேல் அவர் வைத்த விசேஷித்த அன்புதான் இதற்கு காரணம். மனிதர்கள் மூலம் இவ்வுலகில் காரியங்கள் நடைபெறலாம். ஆனால் மனிதர்கள் கருவிகள்தான். மனிதர்கள் மூலம் உனக்கு உதவிகளையும், நன்மைகளையும் கட்டளையிடுபவர் தேவன் இயேசுதான். முதலாவது தேவனுடைய கிருபை வேண்டும். அப்பொழுது அந்த காரியம் வாய்க்கும்.

## பரலோக தேவன்

நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து (பரலோகத்தில்) உண்டாகி, ஜோதிகளின் பிதாவினடத்திலிருந்து இறங்கி வருகிறது என்று யாக்கோபு 1:17ம் வசனம் கூறுகிறது. நம்மை உருவாக்கிய தேவாதி தேவனுடைய திட்டம்தான் பூமியில் நிறைவேறும். அவரை உண்மையாய் தேடி வாழும், அவருக்கு பயந்து நடக்கும் நல்லவர்களுக்கு இப்படி நடக்கும். ஆம்! உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும் (மல். 4:2) தேவன் தீங்கு செய்பவர் அல்ல. உனக்கு நன்மையை மட்டுமே தருபவர். தேவன் தரும் ஆசீர்வாதத்தை, கிருபை வரங்களை பூரணமான வரம் என்று இந்த வசனம் கூறுகிறது. ஈவு என்றால் தேவன் தரும் நன்மைகள்.

## ஞானம் தருவார்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும் என்று யாக்கோபு 1 : 5 ம் வசனம் கூறுகிறது. இவ்வுலகில் நீ நன்றாய் வாழ ஞானம் தேவை. மனிதர்களோடு பேசி நன்மைகளை பெற ஞானம் தேவை. தேர்வில் உயர்ந்த மதிப்பெண்களை பெற ஞானம் தேவை. குடும்பத்தில் நற்பெயர் பெற ஞானம் தேவை. இப்படி எல்லாவற்றிற்கும் தேவையான இந்த விசேஷித்த ஞானத்தை உனக்கு தர அதிகாரமுடையவர் தேவன் இயேசு மட்டுமே. ஆகவே இந்த ஞானத்தை உன் பிரார்த்தனை மூலம் வருந்தி கேட்டு அவரிடமிருந்து எப்படியாவது பெற்றுக் கொள்.

## செல்வம் தருவார்.

இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கு ஏற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு,

கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு கல்விமானின் நாவை தந்தருளினார். காலைதோறும் என்னை (இயேசு) எழுப்புகிறார். கற்றுக் கொள்கிறவர்களைப் போல நான் கேட்கும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார் என்று ஏசாயா 50 : 4ம் வசனம் கூறுகிறது. தேவன் இயேசு அதிகாலை உன்னை தட்டி எழுப்பி ஜெபிக்க வைப்பார். இந்த நேரத்தில் தேவன் இயேசு உனக்குள் தன் விசேஷித்த ஞானத்தை ஊற்றுவார். ஒரு ஆசிரியரைப் போல, வேத வசனங்கள் மூலமாக உனக்கு அநேக காரியங்களை கற்று தருவார். உன்னை நல்வழியில் நடத்தி சிறந்த ஆசீர்வாதங்களை தருவார். துன்பப்படுபவர்களுக்கும், கவலைப்படுபவர்களுக்கும், நோயாளிகளுக்கும், ஏற்ற ஆறுதலான வார்த்தைகளை நீ பேச கற்றுத் தருவார். இது மட்டுமா, ஐஸ்வரியம் என்று அழைக்கப்படுகிற செல்வத்தையும், இவ்வுலகில் கனமும் (மக்கள் மத்தியில் மரியாதையையும்) சேர்த்தே அவர் உனக்கு தருவார். உன்னை மகிழச் செய்வார். ஐஸ்வரியமும், கனமும் உம்மாலே (இயேசுவால்) வருகிறது (1 நாளாகமம் 29:12) என்று வாசிக்கிறோம். கடினமாய் உழைத்து, உண்மையாய் வாழ்ந்து, பிறரிடம் அன்பு செலுத்தி இவைகளை கேள், நீதியின் சூரியன் இயேசு உனக்கு எல்லா ஆசீர்வாதமும் தருவார்.

## இயேசு செய்த அற்புதம்

அன்பு சகோதரிக்கு,

என் கணவர் சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டு உடலில் புண்கள் ஆறாத நிலையில் இருதய வியாதியினாலும் பாதிக்கப்பட்டு மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தார்கள். நான் உங்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு என் கணவருக்காக ஜெபிக்கச் சொன்னேன். நீங்களும் இதற்காக பாரத்தோடு இறைவன் இயேசுவிடம் தொலைபேசியில் ஜெபித்தீர்கள். கர்த்தர் நம் ஜெபம் கேட்டு என் கணவருடைய உயிரை காப்பாற்றினார். என் கணவர் நல்ல சுகமாக இருக்கிறார். இதற்காக தேவாதி தேவன் இயேசுவை நன்றியோடு துதித்து மகிமைப்படுத்துகிறேன்.

**ஏ. ராஜாத்தி, ராஜஸ்தான்.**

## தரிசனம் கொடுத்த இயேசு



அன்பு சகோதரிக்கு, நான் ஜனவரி 5ம் தேதி கோவையில் நடந்த இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா 2ம் நாள் கூட்டத்தில், அமர்ந்திருந்தேன். அப்போது தம்பி ராஜ்லின்ட் ராபின் என் இயேசு என்ற பாடலை பாடும் பொழுது தம்பி அருகில் இயேசு சிரித்தவாறு நின்று கொண்டிருப்பதை பார்த்தேன். அப்போது என்னால் கீழே அமர்ந்திருக்க முடியவில்லை. தேவன் இயேசு என்னை மேடைக்கு வா என்று அழைத்தார். அதன்படி, மேடையில் அமர்ந்து முழுநிகழ்ச்சியையும் பார்க்க தேவன் கிருபை செய்தார். பரவசப் பாடல்கள், சகோ. ராமராஜன், சகோ. ஆனந்த்பாபு சொன்ன சாட்சிகள் என்னை சந்தோஷப்படுத்தியது. சகோ. ஏ.எஸ்.வி. ராபின் கொடுத்த தேவ செய்தி அனைவர் உள்ளத்தையும் அசைத்து, இக்கூட்டத்தை மிக நேர்த்தியாக நடத்தி தந்து, பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு, ஆசீர்வாதத்தை தந்த கர்த்தாதி கர்த்தர் இயேசுவை நன்றியோடு துதித்து மகிமைப்படுத்துகிறேன்.

**பத்மா,** பெராக்கா ஆலயம் ஒண்டிப்புதூர், கோவை.

எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் – 641 021,
தென் இந்தியா



Our Address
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91 ) 73737 10610 (Jayaraj)
Email: asvrobin@gmail.com www.peaceofjesus.org

தொடர் - 104



# இயேசுவின் ரகசிய வருகை

## ஆயத்தப்படுங்கள், ஆயுத்தப்படுத்துங்கள்

- பொற்செல்வி ராபின்

சகோதர அன்பு

இதோ, சகோதரர்கள் ஒருமித்து (ஒற்றுமையாய்) வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது! என்று சங்கீதம் 133:1ம் வசனம் கூறுகிறது. அங்கே கர்த்தர் (தேவன் இயேசு) என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும், ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்று சங்கீதம் 133:3ம் வசனம் கூறுகிறது. பகை இல்லாமல் அன்பாய், ஒற்றுமையாய் வாழ்பவரை (பின் நாட்களில், இயேசு) பரலோகத்தில் ஏற்றுக் கொண்டு யுக, யுகமாக, நிரந்தரமாய் வாழ வைப்பார் என்று இந்த வசனம் கூறுகிறது.

## இருளில் இருப்பவர்

ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனை பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். தன் சகோதரனிடத்தில் அன்பு கூறுகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான். அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. தன் சகோதரனை (உடன் பிறந்தவர்களை, மற்றவர்களை, குடும்பத்தினரை) பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான். இருளானது (சாத்தான்) அவன் கண்களை குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னது என்று அறியாதிருக்கிறான் என்று (1யோவான்2:9,10)ம் வசனங்கள் நம்மை எச்சரிக்கின்றன. பகை கொண்ட மனிதன் வழி தவறி நரகத்தீயில் இடறி விழுவான் என்பதை நாம் இந்த வசனங்கள் மூலம் அறிகிறோம்.

## கோபம் வேண்டாம்

தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பான் (நரகத்தில் தேவனால் தள்ளப்படுவான்). தன் சகோதரனை வீணனென்று சொல்பவன் ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பான் (தேவனுடைய தண்டனைக்கு ஆளாவான்). மூடனே (முட்டாளே, அறிவு கெட்டவனே) என்று அவமானப்படுத்தி கண்ணீர் வடிக்க வைப்பவன் எரி நரகத்திற்கு ஏதுவாய் இருப்பான். (நரகத்தீயில் தள்ளப்படுவான்) என்று மத்தேயு 5 : 22ம் வசனத்தில் இறைவன் இயேசு கூறுகிறார். கர்த்தருக்கு காணிக்கை செலுத்த வரும் போது, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டு என்று அங்கே நினைவு கூறுவாயாகில் பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டு போய், முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி (சமாதானம் பண்ணி), பின்பு உன் காணிக்கையை செலுத்து என்று மத்தேயு 5:23,24 வசனங்களில் தேவன் இயேசு ஆலோசனை கூறுகிறார்.



- தொடரும்.

## உலக மக்களின் நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்

## ஜெபித்துக்கொள்ளுங்கள்

– ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

- ✦ திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- ✦ உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ✦ ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ✦ ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- ✦ மருத்துவமனை ஊழியம்
- ✦ தொலைக்காட்சி ஊழியம்
- ✦ உபவாச ஜெப ஊழியம்
- ✦ தொலைபேசி ஊழியம்
- ✦ மலைப்பகுதி ஊழியம்
- ✦ பத்திரிக்கை ஊழியம்
- ✦ கைப்பிரதி ஊழியம்
- ✦ புத்தக ஊழியம்
- ✦ கடித ஊழியம்
- ✦ பாடல் ஊழியம்
- ✦ மனநல காப்பக ஊழியம்
- ✦ மிஷனெரி ஊழியம்
- ✦ இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- ✦ விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்














மகப்பேறு மருத்துவம்

எலும்பு முறிவு சிகிச்சை

நுண்துளை அறுவை சிகிச்சை

**(Laparoscopy, Arthoscopy, Key Hole Surgery)**

மூட்டு மாற்று அறுவை சிகிச்சை

தண்டுவட அறுவை சிகிச்சை,

பொது அறுவை சிகிச்சை,

செவிலியர் பயிற்சி படிப்பு



## பெத்தேல் மருத்துவமனை

223, டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலை, கோயமுத்தூர் – 641 012.

தொலைபேசி : +91 422 2498884. 3245300 Fax : +914222496147

Email : bethelhospital2006@yahoo.co.in



Dr. S. ராஜபாண்டியன் MS (Ortho) D. Ortho.,

Dr. ஷீலா ராஜபாண்டியன் MD. DGO.,

JB HOMES

Build your Home !.... Like your Dreams !...

ஜே.பி. ஹோம்ஸ்-ன் முதல் படைப்பு

150 VILLAS

JENIFER NAGAR

கற்பகம் காலேஜ் அருகில், கோயமுத்தூர்.

DTP

அப்ருவ்டு வீட்டுமனைகள்

1. யூகோ வங்கியில் 80% கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.
2. மனையிடங்களை பார்வையிட வாகன வசதி உள்ளது.
3. கோவை – பொள்ளாச்சி மெயின் ரோடு
4. மனையை சுற்றிலும் பாதுகாப்பு 24 மணி நேரமும்
5. சோலார் மின் விளக்குகள்
6. பைப்பாஸ் – 3 கி.மீ.
7. கற்பகம் மருத்துவக்கல்லூரி மிக அருகில்

BOOKINGS OPEN NOW DON'T MISS IT

0422 2523370



தொடர்பு முகவரி :

JB HOMES AND PROPERTY DEVELOPERS PVT LTD.

No.3, R.R. Layout, New Sidhaputhur, Coimbatore - 641 044.
Email id : jbpropertydeveloperspvtltd@gmail.com

எங்களது வங்கி : யூகோ வங்கி, ரேஸ்கோர்ஸ், கோவை – 18.

SELVASINGH TOYS & MUSICALS

Just Born Baby, Imported Toys, Funskool, Anand, Hcl Games
Sony Psp, Ps2, TV Video Games All Types Of Games






SELVASINGH STORES

Opp Lakshmi Complex, Crosscut Road,
Coimbatore - 12. Ph : 2493987

John Graphics, Cbe. Cell : 9994156874



# SOWING THE SEEDS OF EXCELLENCE

## ADMISSIONS OPEN FOR 2014

**Karunya focuses on**
**| Academic Excellence | Social Concern | Value Inculcation |**

### Schools of the University:

Civil Engineering,
Mechanical Sciences, Electrical Sciences,
Computer Science and Technology,
Biotechnology and Health Sciences,
Science and Humanities &
Business, Leadership and Management

**B Tech / B Tech Lateral Entry / M Tech / MCA Lateral Entry / M Sc / PG Diploma / M Phil / Ph D progams in different branches / disciplines**

### Karunya provides everything you need to excel

| Research infrastructure | Funded projects
| Qualified faculty | Digital library
| NABL laboratory | Extension activities
| Residential campus | Excellent hostels
| Food for all tastes | Wi-Fi provisions
| Value education | Industrial links

**Excellent Placement Opportunities**

**Merit Scholarships: Full / Half tuition fee waiver for Meritorious students**

**Collaboration with Top Ranking International Universities**







**Karunya Entrance Exam** for B.Tech held at 60+ centers on **26th April 2014**

**Merit Based Admissions**

**Research Focus :** Water, Food, Health & Renewable Energy

**FOR ADMISSIONS CONTACT : 0422 2363636** TOLL FREE NUMBER : 18004254300 Email : admissions@karunya.edu

**APPLY ONLINE AT :** http://admissions.karunya.edu/



Late Dr. D. G. S. Dhinakaran
Founder Chancellor - Emeritus

## Karunya UNIVERSITY

(Karunya Institute of Technology and Sciences)
Declared as deemed-to-be-university under Section 3, UGC Act, 1956
Karunya Nagar, Coimbatore 641 114, Tamilnadu, India

**www.karunya.edu**



Dr. Paul Dhinakaran
Chancellor



Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/-  ஆண்டு சந்தா - ரூ. 40/-

## முதியோர் நலனில் இயேசுவின் சமாதானம்






இருகூர் ஞானமணி அம்மையார் முதியோர் இல்லத்திற்கு சென்று ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் அரிசி, ஆடைகள் மற்றும் பண உதவி செய்த போது

## தூத்துக்குடியில்

# லெந்து கால கன்வென்ஷன் கூட்டங்கள்

**செயின்ட் பேட்ரிக் சி.எஸ்.ஐ. ஆலய மைதானம்**

**ஏப்ரல் 11,12,13 வெள்ளி, சனி, ஞாயிறு**

**தினமும் மாலை 6 மணி**



தேவ செய்தி
**பொற்செல்வி ராபின்**

சிறப்பு பாடல்கள்
**ராஜ்லின்ட் ராபின்**



* உள்ளத்தை உருக்கும் பரவசப் பாடல்கள்
* உயிர்ப்பிக்கும் தேவ செய்திகள்
* எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுதலை தரும் ஜெபம்

உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கும்

**போதகர் & சபையார்**
**செயின்ட் பேட்ரிக் சி.எஸ்.ஐ. ஆலயம்**

இயேசுவின் சமாதானம்
பரவச நேரம்



தமிழன் டி.வி.யில்

ஏப்ரல் 14 28 திங்கள்

ஒவ்வொரு 2வது, 4வது திங்கட்கிழமைகளிலும்

காலை 7.15

இமயம் டி.வி.யில்

IMAYAM

ஒவ்வொரு 2வது, 4வது செவ்வாய்க்கிழமைகளிலும்

ஏப்ரல் 8 22 செவ்வாய்



Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Angel Print Systems, 818-Main Sathy Road, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN